# நகல்

[1.10.1936] ✓ மா. ஜம்புலிங்கம்

அசல் – இல்லை. நகல் – 1

1–10. ௩௬

உ
சிவமயம்

Vidhwan M. Jambulinga Gurukal
Tamil Pandit
B. H. S. Musiri

ஸ்ரீ ஹ ஸ்ரீ தமிழ்த் தெய்வத்தின் திருவடிகட்கு ஜம்புலிங்கம் அனேக நமஸ்காரம்

இவண் அடியேன் திருவடி கருதும் தவப் பேற்றால் நலனே. அவண் தங்கள் திருமேனி நலத்தைத் திருமுகம் விடுக்கப் பணிந்து வேண்டுகின்றேன்.

தங்கள் அருமைச் சகோதரர் அவர்களால் சதாபிஷேக வரலாறு அனுப்பப்பெற்ற பாக்கியம் பெற்றமைக்கு என் நல்வினையை நினைவித்துதிக்கின்றேன். தமியேன் பண்டிட் களாக விண்ணப்பம் அனுப்பாமைக்குப் பெரிதும் பொறுத்தருள வேண்டுகின்றேன்.

பிழைபல பொறுக்கும் பேரறிவாள!

அடியேனது சிற்றறிவிற்றோன்றிய வெண்டுறைகளைக் கீழே குறிக்கின்றேன். பொறுத்தின்னருள் செய்யவேண்டுகின்றேன்.

1 உம்பருயர் திருவளருந் தமதான புரநகரி லுதித்தமேலோன்
அம்புவியல் முதற்கலைத்தேர்ந் தரும்புலவர் விரும்புதமிழ்ச் சாமிநாதன்
உம்பரமு தங்கைக்க வுலந்தாற்றுத் தமிழ்ப்பணியை புரக்கக்கேட்டு
இம்பரினி நிலைபிரிந்து தவம்புரிய பெரியவரை குறுகினவே.

2. குருமணியே! கலைமணியே! இனைமணியே! எனச்சில்லோர் குறிப்பர் நின்னை
தருநிதியே, தமிழ்நிதியே! தயாநிதியே எனச்சில்லோர் சாற்றுவர்கள்,
தெருட்கடலே அருட்கடலே சிவபக்தி வளர்கடலே! என்பார் சில்லோர்.
இருள்கடியு மறிவினனே என்னென்றுன் சீரெடுத்தே யியம்ப வல்லேன்

3. நாநலத்திற் புலவர்குழா மினியைந்தே யெடுத்தியம்பு நல்லோனை
பாநலத்தின் மாரிபொழி மீனாட்சி சுந்தரனும் பாவலோனின்
தேநலத்தின் வரலாற்றைச் சேகரித்தனைத்தும் தெரிந்துவக்க தெரித்தமேலோய்
நீநலமார் நின்சரித முழுமையுமே எழுதவே வேண்டி நின்றேன்

4. நீயுடைச் சரிதமெல்லா மெழிந்தமிழ்ச் சரிதமாகும்
மீயுயர் விசும்பினோரும் விரும்புநல் லமிர்தமாகும்
ஆய்வுரை செய்யும் வன்மை அடக்கம் ஆள் வினைநல்வாய்மை
தேய்ந்திடு மாறிலா தென்றும் திகழுற மாதலாலும்.

நகல்



5. நீயுரைத் திலையே லிந்த நெடுநிலந் தன்னில் யார்தாம்
பாயுளம் புலனிற் பாயா தோரிடம் பயிலச் செய்யும்
நோய்விலா நுழைக்கு. நின்றான் ஒப்புயர்வற்ற வாழ்க்கைத்
தூய்மையிற் சரிதந் தன்னைத் தொடங்கியே முடிக்கவல்லார்

6. ஆதலி னடியே னன்பால் வேண்டுவின் னப்பம் கேட்டே
ஈ.தலிற சீர்த்தி பெற்ற ஏழ்வள்ள லும்பின் போகக்
காதலி னிலைத்த காட்சி வண்மையைக் கவிதை செய்த
வேதநா | ஜோதிஞ்சாமி | நாதனே | விளம்ப | வேண்டும்

7. கலைநாய கம்மாம கோபாத்தி யாய
சயிவம் உ.வே சாமிநா தையர் — கலையணிந்தோன்
அல்லாண்ட கண்டத்தெம் மையன் கருணையினில்
பல்லாண்டு வாழ்கவிப் பார்.

பிழை பொறுக்க. தங்களுமைத் தம்பியாரவர்களுக்கு
எனது வணக்கத்தையும் எனதுவகையையும் உரித்தாக்கப்
பன்முறை பணிந்து வேண்டுகின்றேன். வணக்கம்
வணக்கம்.

இங்ஙனம்
தங்கள் திருவடித்தொண்டன்

மா. ஜம்புலிங்கம்.

நகல்

50

1-10-1936.

மா. ஜம்புலிங்கக்குருக்கள்

Vidvan
Sri. M. Jambulingagurukal.
Tamil pandit.
B.H.S. Musiri.

Pg: 396 to 399

த. க. VOL '2'

16